தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 14-1-2016
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமெரிக்க கார்னல் பல்கலைக்கழக மாணவர்களின் வருகை

அமெரிக்கா கார்னல் பல்கலைக்கழகம், தார்வாடு மற்றும் அசாம் வேளாண்மைப்பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள், கார்னெல் பல்கலைக் கழகத்தின் பன்னாட்டு வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 11-1-2016 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டனர். இம்மாணவர்கள் இந்தியாவின் குறிப்பாக தமிழகத்தின் வேளாண் முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து கொண்டனர்.

மாணவர்கள் மூன்று குழுக்களாக (வேளாண் முறைகள், மதிப்பு கூட்டுதல், கிராமப்புற உள்கட்டமைப்பு), தமிழ்நாடு வேளாண் பல்கலைப் கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சி மையங்களைப் பார்வையிட்டனர். பழத்தோட்டத்தைப் பார்வையிட்டு, வாழை சாகுபடி முறைகளைக் கற்றறிந்தனர். மாணவர்களுக்கு இடையே, பன்னாட்டு விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டில் உள்ள முக்கிய இடர்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் நடந்தது. மேலும் அவர்களுக்கு இ - விரிவாக்கம், கிசான் அழைப்பு மையம் மற்றும் சமுதாய வானொலி ஆகியவற்றின் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டன.

விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில், அறுவடைக்குப் பின் ஏற்படக்கூடிய இழப்புகளைத் தவிர்க்க அறுவடை பின்சார் தொழில் நுட்ப மையத்தில் தொழில் நுட்ப முறைகள் விரிவாக்கப்பட்டது. தொழில் முனைவோர்களுக்கு எவ்வாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உதவியாக உள்ளது என்பதை விவசாய தொழில் மேம்பாட்டு இயக்குனரகம் விவரித்தது. மேலும் நேனோ தொழிலுநட்பவியல் பிரிவில்

நடைபெறும் ஆராய்ச்சிகள், பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்திழுத்தது. உள்நாட்டு வெளிநாட்டு சந்தை தகவல் நிலையத்தின் மூலமாக தெரிவிக்கப்படும் சந்தை விலை நிலவரங்கள் வெளிநாட்டு மாணவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். கு. இராமசாமி அவர்களுடன் கலந்துரையாடினர். துணைவேந்தர், அவர்களை செய்முறை பயிற்சி மூலமாக கற்குமாறு பரிந்துரைத்தார். இந்திய வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பான்மையானோர் சிறு விவசாயிகள். மேலும் 60 சதவீத கிராமப்புற மக்கள் விவசாயத்தையும், அதனைச் சார்ந்த தொழிகளையுமே நம்பியுள்ளனர். உணவு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இந்தியா பதப்படுத்தப்பட்ட உணவை ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமானால், இந்திய உற்பத்தியாளர்கள், நுகர்வோரின் உணவு பாதுகாப்பு தரத்தை அடைய வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்